# வல்வெட்டித்துறை நகரபிதா பதவியேற்கும் வைபவத்தில் மொழிந்த கன்னி உரை



திரு ந.ஆனந்தராஜ்
நகரபிதா
வல்வெட்டித்துறை

## எனது அன்புக்கும்,பெருமதிப்புக்கும் உரிய உறவுகளுக்கு,

## வல்வெட்டித்துறை நகர அபிவிருத்தியில் எம்மவரின் பங்கு

இந்த இனிய காலைப் பொழுதில் உங்களுடன்,அனுபவங்களையும், அன்பையும் பகிர்ந்து கொள்வதற்கான ஒரு சந்தர்ப்பத்தில் உங்கள் ஒவ்வொருவருக்கும் எனது வாழ்த்துக்களையும், வணக்கத்தையும் தெரிவித்துக் கொள்கின்றேன்.கடந்த பத்து வருடங்களின் பின்னர் எமது மக்கள் தமது பிரதேசத்தை ஆளும் வாய்ப்பு நடந்து முடிந்த உள்ளூராட்சித் தேர்தலின் மூலம் வழங்கியதன் மூலம், வல்வெட்டித்துறை நகராட்சி மன்றத்தின் தலைவராக நியமனம் பெறுவதற்கேற்ற வகையில் அதிகப்படியான பெரும்பான்மை வாக்குகளால், என்னையும் எமது ஏனைய ஒன்பது உறுப்பினர் களையும் தெரிவு செய்து வல்வெட்டித்துறை நகரசபை எல்லைக்குட்பட்ட பிரதேசங்களை உன்னதமான ஒரு நகரமாகக் கட்டி எழுப்புவதற்கான ஆணையை வழங்கியுள்ளீர்கள்.அந்த மகத்தான சாதனையை நிலை நிறுத்த எமக்கு உதவிய உங்களுக்கும், புலம் பெயர்ந்து வாழும் எமது உறவுகளுக்கும்,மற்றும் அச்சு,இலத்திரனியல் ஊடகங்களுக்கும்,இணையத் தளங்களுக்கும் எனது நன்றியைத் தெரிவித்துக் கொள்கின்றேன்.

இத் தேர்தலின் மூலம், என் மீதும் எங்கள் சபைக்குத் தெரிவான ஏனைய ஒன்பது உறுப்பினர்களின் மீதும் முழுமையான நம்பிக்கை வைத்து வாக்களித்த மக்களின் எதிர்பார்க்கைகளையும்,விருப்பங்களையும் நிறைவேற்றுவதே எமது சபையின் முக்கிய பணியாகும். அவற்றை நிறைவேற்றுவதற்காக அயராது உழைத்து உலக நாடுகளின் முன்னணி நகரங்களைப் போன்று எமது நகரத்தையும் மாற்றியமைப்பதே உங்களுக்கு நாங்கள் செய்யும் நன்றிக்கடனாகும்.

வல்வெட்டித்துறை நகர சபை என்பது,தொண்டைமானாறு தொடக்கம்,கொம்மந்துறை, வல்வெட்டித்துறை,வல்வெட்டி,பொலிகண்டி,மானாங்கானை ஆகிய பிரதேசங்களை உள்ளடக்கியதும் 3km நீளமும்,1km அகலமும் உள்ள சிறிய ஒரு நகரமாகும்.பிரதேசம்,சாதி,மதம்,அரசியல் அபிலாசைகள் போன்ற எந்தவிதமான பாரபட்சமுமின்றி அனைத்துக் கிராமங்களையும், வளர்த்தெடுத்து எமது மக்களின் உள்ளங்களில் மகிழ்ச்சியையும்,மனநிம்மதியையும்,நிறைவையும் ஏற்படுத்தும் வகையில் எங்கள் ஒவ்வொருவரையும் தெரிவு செய்து சுபீட்சமான எதிர்காலத்திற்காக காத்திருக்கும் உங்களுக்காக எமது சேவைகளை வழங்குவதே இந்தச் சபையின் கடமையாகும். என்பதை உங்களுக்கு அறியத்தருகின்றேன்.

கடந்த 15 வருடங்களாக எவ்வித அபிவிருத்தியுமின்றி,அழிந்த நகரம் போல் ( Ruined City) காட்சி அளிக்கும் எமது தாயக மண்ணைப் பின்வரும் துறைகளில் துரிதமாக வளர்ச்சியடையச் செய்யவேண்டியது எங்கள் ஒவ்வொருவரினதும் கடமையாகும்.

- கல்வி,பொருளாதாரம்,பொதுச் சுகதாரம்,வீதி நிர்மாணம்,பொழுது போக்குகள்,மக்களின் வாழ்க்கைத்தரமேம்பாடு,கைத்தொழில் முயற்சிகள், போன்றவற்றில் கவனம் எடுத்து எமது நகரத்தைக் கட்டி வளர்ப்பதில் உங்கள் ஒவ்வொருவரினதும் ஆதரவை எமது மண்ணும்,மக்களும் வேண்டி நிற்கின்றனர்.

எமது நகரத்தைக் கட்டி எழுப்புவதற்காக நாம் திட்டமிட்டு வைத்திருக்கும் சில வேலைத் திட்டங்களை உங்களுக்கு அறியத் தருகின்றேன்.இவை செயல் திட்ட வடிவில் அமைக்கப்பட்டு அவற்றிற்கான நிதி பெறப்பட்டு சபையின் நான்கு ஆண்டு காலத்திற்கள் நகரம் ஒளிமயமாகும் என்று உறுதிப்படுத்துவதுடன் அதே உறுதியும் நம்பிக்கையும் உங்களிடமும் இருக்கவேண்டும் என்று எதிர்பார்க்கின்றேன்.

- வல்வெட்டித்துறை நகர சபைக்கான நிர்வாகம் அனைத்து கிராம சேவையாளர்களையும். அந்தந்த வட்டார மக்கள் பிரதிநிதிகளையும் கட்சி வேறுபாடின்றி அனைத்து நகரசபை உறுப்பினர்களையும், சில துறைசார் வல்லுனர்களையும் உள்ளடக்கியதாக ***"வல்வெட்டித்தறை நகர அபிவிருத்தி ஆலோசனைச்சபை" (Valvettithurai Urban Development Advisory Board)*** உருவாக்கப்பட்டு அந்தச் சபையின் ஆலோசனையின் அடிப்படையில் வல்வை அபிவிருத்தித் திட்டங்கள் முன்னெடுக்கப்பட்டுச்

செயற்படுத்தப்படும். இதன் காப்பாளர்களாக அமைச்சுக்களின் செயலாளர்களும் பிரதேச செயலாளரும் இருப்பர். இதனூடாக ஊழலற்ற, வெளிப்படைத் தன்மையான (Transparency) நிர்வாகம் ஒன்று ஏற்படுத்தப்படும்.

- ஒரு நகரத்தின் சுபீட்சமான எதிர்காலம் மற்றும் பொருளாதார அபிவிருத்தி, மக்களின் வாழ்க்கைத்தரம் என்பன அந்த நகரத்தின் கல்வி அபிவிருத்தியிலேயே தங்கியுள்ளது.என்பதை மனதில் கொண்டு வல்வெட்டித்துறை நகர சபைக்குட்பட்ட அனைத்துப் பாடசாலைகளினதும் **கல்வித் தரத்தை**, மேம்படுத்துவதற்கான திட்டங்களை வகுப்பதுடன் **பௌதிக,ஆளணி வளங்களில்** தன்னிறைவு அடைந்துகொள்வதற்கு வலயம் மற்றும் மாகாணக்கல்வித் திணைக்களம், மாகாண கல்வி அமைச்சுஆகியவற்றினூடாக உதவிகளைப் பெறுதல்.

- கல்வி அமைச்சின் முன்பள்ளிப் பிரிவுப் பணிப்பாளருடன் இணைந்து **முன்பள்ளிகளை**(Nursery) நவீனமயப்படுத்தி,அவற்றுக்கான வளங்களையும், வசதிகளையும் ஏற்படுத்திக் கொடுத்தல்.

- பயன்மிக்க வகையில் பொழுதைப் போக்கவும், வாசிப்புத் திறனை மேம்படுத்தவும்நவீன வசதிகளைக் கொண்ட **பொது நூலகம்** ஒன்றை உருவாக்கி, அவற்றிற்கான நூலக உதவியாளர்களை நியமித்து உரிய பயிற்சிகளை வழங்குதல். வல்வெட்டித்தறை நகர சபையின் ஏனைய பிரதேசங்களில் அதே வசதிகளைக் கொண்டதாக உப நூலகங்களையும் அமைத்தல்.

- பெரிய தபால் கந்தோர் கட்டுவதற்கான நிலத்தைக் கொள்வனவு வெய்து தபால்மா அதிபரிடம் கையளித்தல்.கட்டிடம் அவர்களால் கட்டப்படும்.

- உயர் வகுப்பு மாணவர்கள் பயனடையக்கூடிய வகையில் நவீன இலத்திரனியல் சாதனங்கள் கொண்டதாகவும், மாலை நேர சுயகற்றலுக்கான இடமாகவும், வழிகாட்டலுடனும், பாதுகாப்புடனுடனும் கூடிய**கற்றல் மண்டபங்களை** (Reading Hall) நூலகத்தில் அமைத்தல்.

- தொண்டைமானாறு,கம்பர்மலை,கெருடாவில்,வல்வெட்டி,வல்வெட்டித்துறை, பொலிகண்டி, ஆகிய இடங்களில் வுமவசதிகள் கொண்ட **சிறுவர் பூங்காக்களை** அமைத்து குழந்தைகளின் உடல்,உள விருத்தியை மேம்படுத்த உதவுதல்.

- வல்வெட்டித்துறைக்கான **குடிநீர் விநியோகத்திற்கான கட்டுமானப்பணிகள்** ஆரம்பிக் கப்பட்டுள்ள நிலையில், தொடர்ச்சியாக குடிநீர் வழங்கப்படுவதை உறுதிசெய்தல்.

- மன அமைதியை ஏற்படுத்தும் வகையில் பொழுது போக்கக்கூடிய நன்கு **வடிவமைக்கப்பட்ட கடற்கரைகளை** தொண்டைமானாறு, வல்வெட்டித்துறை, பொலிகண்டி போன்ற பிரதேசங்களில் உருவாக்குதல்

- பிள்ளைகளின் ஆன்மீக உணர்வையும், நற்பண்புகளையும் வளர்க்கும் வகையில் ஆலயச் சூழல்களில் அமைந்ததாக 5 இடங்களில் **அறநெறி வகுப்புக்களை** நகரசபை மூலம் ஆரம்பித்து இலவசமாக நடத்துதல்.

- சகல வசதிகளையும்,அனைத்து விசேட சிகிச்சை முறைகளையும் கொண்டதாக தகைமையுள்ள வைத்திய அதிகாரிகளை நியமித்து, **வல்வெட்டித்துறையின் வைத்தியசாலையைத் தரம் உயர்த்த** நடவடிக்கை எடுத்தல்.

- மாணவர்களின் ஆராய்வு ஊக்கத்தையும் சுய கற்றலையும் வளர்ப்பதற்காக தொண்டைமானாற்றில் உருவாக்கப்பட்ட **"கற்றலுக்கும்,ஆய்வுக்குமான விஞ்ஞான வெளிக்கள நிலையத்தை".(Learning & Research Science Field Work Centre)** சகல தொழில்நுட்ப வசதிகளையும்,தங்கிப் பயிற்சி பெறும் வசதிகளையும் கொண்டதாக மீண்டும் தொண்டைமானாற்றில் இயக்குவதற்கான நடவடிக்கைகளை எடுத்தல்.

- வரலாற்றுப் புகழ் பெற்ற **செல்வச் சந்நிதி ஆலயச்சூழலையும் வீதிகளையும்** புனரமைத்து புனித பிரதேசமாக உருவாக்குதல்.

- வருடா வருடம் **கலை,இலக்கியப் போட்டிகள், கழகங்களுக்கிடையேயான விளையாட்டுப் போட்டிகளை** நகர சபையூடாக நடத்தி விளையாட்டுத் துறைக்கும்,கலை இலக்கியத் துறைக்கும் ஊக்கமளித்தல்.

- ஆண்டுதோறும் **"முத்தமிழ் விழா"** நடத்தி வல்வெட்டித்துறை நகர சபை எல்லைக்குட்பட்ட சாதனையாளர்கள்,எழுத்தாளர்கள்,கலைஞர்களுக்கு உயர் பட்டமும் விருதும் வழங்கிக் கௌரவித்தல்.

- ❖ வல்வையின் பொருளாதார, உட்கட்டமைப்பு அபிவிருத்தியை முன்னெடுத்து தனிநபர் வாழ்க்கைத் தரத்தை மேம்படுத்துதல்.இதற்கென மாகாண சிறுகைத் தொழில் அமைச்சுடன் இணைந்து தேவைக்கேற்ப பிரதேச வளங்களைப் பயன் படுத்தும் வகையில் **கைத்தொழில் முயற்சிகளை** முன்னெடுத்தல்.

- ❖ வல்வை நகர சபை எல்லைக்குட்பட்ட பிரதேசங்களின் மக்களின் வாழ்க்கை முறைகள், பாரம்பரியம்,கலை, பண்பாடு, ஆகியவற்றைக் கொண்ட **"ஆவணக் காப்பகம்"** ஒன்றையும் அதனுடன் இணைந்ததாக அரும் பொருட் காட்சியகத்தையும் நிறுவுதல்.

- ❖ வல்வெட்டித்துறை நகரசபைக்குக் கீழ் உள்ள பிரதேசங்களை இணைத்து **தனியான பலநோக்குக் கூட்டுறவுச் சங்கத்தை** உருவாக்கி அவ்வப் பிரதேசங்களில் **கூட்டுறவு நகரத்தை** உருவாக்கி குறைந்த விலையில் பொருட்கள், பண்டங்கள்,சேவைகள் எமது மக்களைச் சென்றடைவதை உறுதிப்படுத்துதல்.

- ❖ பல் நோக்குக் **கலாசார மண்டபத்தை** உள்ளடக்கிய **திருமண மண்டபம்** ஒன்றை உருவாக்குதல்.இதற்கென பொருத்தமான காணி உரியவர்களுடன் தொடர்பு கொண்டு ஒழுங்கு செய்யப்பட்டுள்ளது.

- ❖ சகல வசதிகளையும் கொண்ட **விளையாட்டரங்கத்தை** அமைத்து சர்வதேசதரத்திலான பயிற்சிகளையும்,உபகரணங்களையும் வழங்குதல்.இதற்கு மாகாண விளையாட்டுத்துறை திணைக்களப் பணிப்பாளருடைய உதவிகளையும்,ஒத்துழைப்பினையும் பெற்றுக் கொள்ளுதல்.

- ❖ பல வருடங்களுக்கு மேலாக திருத்திப் புனரமைக்கப்படாதிருக்கும், வல்வெட்டித்துறை நகரசபை எல்லைக்குட்பட்ட பிரதேசங்களில் உள்ள **அனைத்து உள் வீதிகளையும் புனரமைத்து தார் றோடுகளாக்குதல்.**

- ❖ பொதுப் **போக்குவரத்து வசதிகளைக் குறிப்பாக 751,752,766,763 ஆகிய சேவைகளை** சீரான நிலைக்குக் கொண்டு வருதல்.இடை நிறுத்தப்பட்ட 752 பாதைக்கான போக்குவரத்து ஒழுங்குகளை சாலை அத்தியட்சகருடன் தொடர்பு கொண்டு மீள ஆரம்பித்தல்.

- ❖ செயலிழந்து ஒளி இழந்து போய் உள்ள **வீதி விளக்குகளைப்** புனரமைத்து நகருக்கு ஒளியூட்டுதல்.

- ❖ கடற்றொழில்,விவசாயம்,பனந்தொழில் மற்றும் ஏனைய தொழிற்றுறைகளில் ஈடுபட்டுள்ளவர்களுக்கான ஊக்குவிப்பை வழங்குவதுடன் **தொழில் நுட்ப ரீதியில்** திட்டமிட்டு உற்பத்தியைப் பெருக்குவதற்கான வழிகாட்டலையும் வழங்குதல்.

- ❖ **ஊறணி நீர் ஊற்றை** ஆழப்படுத்துவதுடன்,**ஊறணி ஈமக்காட்டைத்** தூய்மைப்படுத்துதல்.

- ❖ **மயிலியதனை ஈமக்காட்டை** புனரமைத்து சூழல் மாசடைதலைத் தடுக்க உடனடியாக நடவடிக்கை எடுத்தல்.

- ❖ தொண்டைமானாறு,வல்வெட்டித்துறை,பொலிகண்டி ஆகிய பிரதேசங்களில் சொந்த வீடுகளில் இருந்தும் இடம்பெயர்ந்த மக்களை அவரவர் சொந்த இடங்களில் **மீளக் குடியமர்த்துவதற்கான** ஏற்பாடுகளை உரிய இராணுவ மற்றும் சிவில் அதிகாரிகளுடன் தொடர்பு கொண்டு, அவர்களை இயல்பு வாழ்க்கைக்குக் கொண்டு வருதல்.

- ❖ வயது முதிர்ந்த உழைத்து ஓய்ந்து கவனிப்பாரற்று இருக்கும் உழைப்பாளி களுக்கான **ஊக்குவிப்புக் கொடுப்பனவை** வழங்க நடவடிக்கைகள் எடுத்தல்.

- ❖ 1988-1989 காலப்பகுதியில் இருந்த உதவி உள்ளுராட்சி உதவி ஆணையாளரின் அனுசரணையுடன் வல்வைப் பிரஜைகள் குழு தயாரித்த **வல்வெட்டித்துறை நகர அபிவிருத்தித் திட்டத்தில்** முன்மொழியப் பட்ட அபிவிருத்தித் திட்டங்களை நடைமுறைப்படுத்துதல்

எவ்வித தடங்கலும் இன்றி,சுமுகமான, ஒரு சூழலில் இவை ஒவ்வொன்றையும் நிறைவேற்றுவதை ஒரு சவாலாகவே எடுக்கவேண்டியிருப்பதால், எனது முயற்சிகள் வெற்றியடைய உங்கள் ஒவ்வொருவரினதும் ஒத்துழைப்பையும் ஆதரவையும் நாடி நிற்கின்றேன். எனது இந்தத் தர்மயுத்தத்தில் கட்சி ரீதியாகவோ அல்லது உட்கட்சி ரீதயாகவோ வெவ்வேறு துருவங்களாகப் பிரிந்து நின்று நாம் ஒவ்வொருவரும் களத்தில் நின்று போட்டியிட்டபோதும், எமது மக்கள் நொந்து போன நிலையிலும் ஒரு இலட்சியத்திற்காக ஒன்றிணைந்து வாக்களித்து தமக்குப் பிடித்தவர்களைத் தெரிவு செய்து, உறுதியான சபையை உருவாக்கிய எமது மக்களின் மனங்களைக் காயப்படுத்தாத வகையில் நாம் ஒவ்வொருவரும் நடந்து கொள்ள வேண்டும்.எமது தனிப்பட்ட சுய விருப்புக்களை நிறைவு செய்து கொள்ளும் வகையில் எமது தாய் மண்ணான வல்வெட்டித்தறையின் ஒருமைப்பாட்டைச் சிதைக்காத வகையில் எமது செயற்பாடுகள் இருக்குமாறு

பார்த்துக் கொள்ளவேண்டும்..இடப்பெயர்வுகள்,குடும்ப உறவுகளின் இழப்புக்கள்,சொத்து இழப்புக்கள் என்பவற்றின் மத்தியில், ஆற்றொணாத்துயரில், வாழ்ந்து கொண்டிருக்கும் நிலையிலும ஏதோ ஒரு நம்பிக்கையின் அடிப்படையில் அரசியல் உரிமைக்கும், நகர அபிவிருத்திக்கும், தமது பிள்ளைகளின் கல்வி மேம்பாட்டிற்கும்,தனிநபர் வாழ்க்கைத்தர உயர்ச்சிக்கும் காத்து நிற்கும் எமது உறவுகளை இப்போதைக்கு இன்னுமொரு உள்ளூராட்சித் தேர்தலுக்கு முகம் கொடுக்க வைக்காதிருப்பதே முதலில் நாம்,அவர்களுக்குச் செய்யும் நன்றிக் கடனாகும் என்று கூறி இந்தச் சபையின் உறுப்பின்ர்களினதும்,அறிவுசார் மக்களினதும் எமது அரசினதும்,பாராளுமன்ற உறுப்பினர்களினதும் ஒன்றுபட்ட உழைப்பின் மூலம் எமது நகரத்தைக் கட்டி எழுப்புவதுடன் எமது மக்களின் மனதில் ஏற்படுத்தப்பட்ட காயங்களை ஆற்ற எம்மிடையே உள்ள கட்சி அரசியல் மற்றும் தனிப்பட்ட பேதங்களை மறந்து ஒன்றாகச் சேர்ந்து செயற்பட நாம் உவ்வொருவரும் இந்த நன்னாளிலே உறுதி எடுத்துக் கொள்வோமாக. இந்த சத்தியப் போராட்டத்தில் ஒன்றுபட்டு உழைக்க முன்வரவேண்டும் என்று உங்கள் ஒவ்வொருவரையும் கரம்கூப்பி அழைக்கின்றேன். என்றும் உங்கள் அன்பையும்,ஆசியையும் வேண்டி விடை பெறுகின்றேன்.நன்றி! வணக்கம்!.

அன்புடன்
நடராஜா.அனந்தராஜ்
வல்வெட்டித்துறை நகரசபை
26.08.2011